**பகவானுடைய ஸ்ரீமத் நம்மை உயர்த்துகிறது.the final**

கடவுளை, நாம் எல்லோரும் அன்புடன் நேசிக்கிறோம் என்பதற்கு நிரூபணம் என்ன? வினாவுக்கு பலவிதமான பதில்கள் அனுபவத்தின் ஆதாரத்தில் தரப்படுகின்றன. உண்மையான அன்பு செலுத்துவது, எல்லா உறவுகளும் அவர் ஒருவருடன் மட்டும் வைத்து கொள்வது, அவர் விரும்பும் உலக சேவையை உள்ளன்புடன் செய்வது, அவர் ஞானத்தின் வாயிலாக தினமும் நமக்கு எடுத்துரைக்கும் ஸ்ரீமதத்தை எல்லாவகையிலும், பின் பற்றுவது அகிய பல விடைகள் கூறலாம். எல்லாமே உண்மையேயாகும். ஆனால் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாக இருப்பது அவர் ஞானத்தின் மூலம் தரும் ஸ்ரீமத்தை பின்பற்றுவதாகும். ஸ்ரீமத் எனறால் மிக சிரேஷ்டமான மதம் ஆகும். மதம் எனும் வார்த்தைக்கு, கருத்து, அபிப்பிராயம், உபதேசம் என பொருள் கூறலாம். பகவான் ஸ்ரீமத்தின் மூலம், மனிதன் தன்னுடைய உயர்ந்த நிலை அடைய வழிமுறைகள் எடுத்துரைக்கிறார்.தன்னுடைய அன்பு சொரூபத்தின் ஆளுமையை வெளிப்படுத்துகிறார். **தாதி ஒருமுறை கூறியிருக்கிறார், ஞானம் அடிப்படைப் பலனாக, நம்முடைய அன்பின் சொரூபத்தை வெளிப்படுத்துகிறது .**

மதுபனில், அவ்யக்த பாபா, மேலை நாட்டவருடன் நேரிடையாக உரையாடும் காலம், புதிதாக வருகைத்தந்த ஒருவர், அவரை கேள்வி கேட்கிறார்,"பாபா, நம்முடைய சுயமரியாதையை நாம் மீண்டும் எவ்வாறு அடையப்பெறுவது ?" சுலபமாக பதில் சொல்லக் கூடிய விஷயமல்ல. ஆனால் பாபா வெகு சுருக்கமாக மூன்றே வார்த்தைகளில் பதில் கூறுகிறார், **"just follow shrimath"** " ஸ்ரீமத்தை பின்பற்றுங்கள்". அம்மூன்று வார்த்தைகளில் அதன் மகத்துவத்தும் விளங்குகிறது.

**ஸ்ரீமத்தானது நம் அன்றாட செயலாற்றல்களினிடையே, வாழ்வை நிறைவு படுத்தும், உண்மையை வெளிப்படுத்தும் சட்டங்களின் தொகுப்பு (code of truth).** பாபா என்றும் குறையாத உண்மையின் நிறைகலம். அவர் தரும் ஆழ்ந்த உண்மை. எது உண்மை? எது பொய்? அறிய நமக்கு அளவற்ற நிலையில் ஸ்ரீமத் தேவைப்படுகிறது. ஸ்ரீமத் ஒரு சட்டங்களின் தொகுப்பாக மட்டுமல்லாமல் வாழ்க்கையின் வாழும் நெறிகளாக நாம் உணர வேண்டும். ஸ்ரீமத்தானது ஆன்மாவை பாதுகாப்பது மட்டுமன்றி, உடைந்த உள்ளத்தை மீண்டும் குணப்படுத்துகிறது. அதன் எல்லைக்குள் செயல்படும் பொழுது, நம்மை தூய்மைப்படுத்தி, நம் சுய மரியாதையை மீண்டும் பெறச் செய்கிறது. ஸ்ரீமத் எல்லா ஆதிக்கங்களிலிருந்து ஆத்மாவை விடுவிக்கிறது. ஆத்மா தன்னுடைய முதலான, அசலான சக்திகளை மீண்டும் அடைகிறது.

ஸ்ரீமத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். **ஆன்மாவில் இரண்டு செயல் முறைகள் ஆற்றல் கொள்கிறது. ஒன்றானது, நம்முடைய புத்தி, எந்த அளவு ஸ்ரீமத்தை அறிந்து கொள்கிறது**? இதை பொறுத்து இருக்கும் நம் செயலாற்றல். **இரண்டாவது,** என்னுடைய **மனது** செயல்படுமுறை**. எந்த அளவு என்னுடைய மனதானது அதன் பழைய சம்ஸ்காரங்கள், உணர்ச்சிகளினால் பாதிக்கப்படுகிறது?** பாபா, ஸ்ரீமத்தின் மூலம் தன்னுடைய ஞான பூர்வ உணர்வுகள், கண்ணோட்டங்களை நம்முடன் பகிர்ந்துக்கொள்கிறார். அவருடைய கண்ணோட்டத்தில் சம்பந்தங்களும் தொடர்புகளும் எவ்வாறு இருக்கவேண்டும்? என்று தெரிவிக்கிறார். நம்முடைய கண்ணோட்டதில் நாம் எவ்வாறு நாள் தோறும் நம்மை காண்கிறோம்? நம்முடைய பார்வையானது எவ்வளவு தூய்மையாக இருக்கிறது? ஆழமான விஷயமே. இதை காண்பதும், அதனால்,

உணர்ந்து, முன்னேறுவதும் நம்முடைய கடமையாகும் . பாபாவினுடைய ஞானம் எந்த அளவு நம்மில் ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை அறிந்துகொள்வது, நம்மிலும்,சுற்று சுழலிலும், அன்பும்,சுதந்திரமும் வெளிப்படுகிறதா? நம் மீதான அதிகாரம் நம்மில் எந்த அளவு செயல்படுகிறது ? இதை நாம் அறிந்துக்கொள்வது இன்றியமையானதாகிறது.

ஸ்ரீமத், மிக சூட்சுமமானதுமாகும். சரியாக அறிந்து உணர்ந்துகொள்வதும் முக்கியமாகிறது. ஆன்மா உடலிலிருந்து தனிபட்டது என்பதும் ஒரு விஷயமாகும். ஆனால் **நாம் ஐந்து தத்துவங்களாலான உடலி லிருந்து விடுபட்ட இயல்புடைய ஒரு ஆன்மீக சக்தி (Incorporeal soul), தத்துவங்களலால் பாதிக்கப்படாதது . நம்முடைய ஆத்மாவின் இயல்பு உடலிலிருந்து மாறுபட்டது** என்பது அறிந்து, **மற்றவரும் அவ்வாறானவர்** என்று உணர்ந்து, பழகுவதற்கு ஆழ்ந்த சிந்தனையும், முயற்சியும் தேவைப்படுகிறது.

ஸ்ரீமத் பின்பற்றுவது என்பது என்ன? முழு நம்பிக்கையுடன் தந்தையை பின்பற்றுவதாகும். ஒரு மிக ஆழ்ந்த விஷயமாகும். **சத்யுக,திரேதாயுகத்தில் மானிட சமுதாயம், நாகரீகம்,ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் உண்டாக்கப்பட்டதாகும். உண்மை யுடனும், தூய அன்புடனும், சுதந்திரத்துடனும் அனைவரும் இணைந்து செயல் பட்டனர். இதையே பாபா நமக்கு இப்பொழுது கற்று கொடுக்கிறார்.** நம் ஒவ்வொரு வரும் புது உலக படைப்பில் மிகப்பெரிய பங்கு கொண்டிருக்கிறோம், பாபாவின் கட்டளைகளை முற்றிலும் ஏற்று நடத்த கடமைப் பட்டிருக்கிறோம். **பாபா சொல்கிறார், ஸ்ரீமத் பின்பற்றாமல் ஞானத்தை மனத்தில் வாங்கிக்கொள்ளமுடியாது. ஸ்ரீமத்துக்கு கீழ்படிந்தால் தான் உங்கள் யோகம் செயல்படும்.** கடவுளின் முழு சட்டங்களை பின் பற்றாமல் ஆழ்ந்த உண்மைகள் புரிந்துகொள்ள இயலாது. அரைகுறை ஞானம் புத்தியை செயல்படச்செய்யாது. துல்லியமான செயல்களே ஆத்மாவை தன் முன்னேற்ற பாதையில் நிலைக்க செய்யும்.

பாபா, **ஸ்ரீமத் மூலம்** சரியான வகையில் வாழ்க்கையை நிர்வகிக்க வழி காட்டுகிறார். மனது, உணர்வுகள்,உணர்ச்சிகள்,நோக்கம், செயல், உணவு, குடும்பம், சேவை, நேரம் எல்லாவற்றுக்கும் சரியான பாதையில் நடாத்திச்செல்ல, முக்கியமாக மூன்று வகைகளில் திசைக்காட்டுகிறார். முதலாவது, நம் **அன்றாடசெயல் முறைகள்** சாத்வீக உணவு உண்பது, வெள்ளை உடை அணிவது போனற அன்றாட வாழும் முறைகள்**(lifestyle)**, இவை நம்மை மேலும் கர்ம கணக்குகளை சேர்த்துக் கொள்வதிலிருந்து பாதுகாக்கிறது. இரண்டாவதாக, நம்முடைய **நோக்கங்கள்,** எல்லோரையும் ஆன்மாக்களாகவே காணவும், நற்குணங்களையே பார்க்கவும், நல்விருப்பங்களையே கொள்ளவும். இவை ஆத்மாக்கள் தங்கள் பழக்கங்கள், பழைய அடிமையாகிவிட்ட தீய பழக்கங்களிலிருந்து விடுப்படுதல் துக்கத்தை கொடுப்பது வாங்கிக் கொள்வதிலிருந்து விலகுதல், அகியவை மூன்றவது வகையில், **நம் உணர்வுகளுக்கான ஆழ்ந்த அறிவுரைகள்.** குழந்தைகளே, என் ஒருவரையே நினைவு செய்யவும். உடல், உடல் சார்ந்த தொடர்புகள் மறக்கவும் போன்றவை. இவைகளால் ஆத்மா தன்னுடைய அசலான சக்தியை மீண்டும் அடைகிறது. **அவர் ஒருவருக்கே அர்ப்பணித்துக்கொள்ளும் போது, நம் வாழ்க்கைக்கு அவர் பொறுப்பேற்றுக்கொள்கிறார்.**

ஆத்மா தன்னுள், **தூய்மை, தன் முதலான குணமாகும்** என்று அறிந்து கொள்ளவேண்டும். **தூய்மை** என்னுடைய **சுய மரியாதையாகும்,** ஸ்ரீமத் எனக்கு வழிகாட்டக்கூடியது. ஒரு ஸ்ரீமத்தையும் நாம் சிறிதளவும் தவற விடக்கூடாது. இதை

நாம் நாளும் நினைவுகொள்ளவேண்டும். **நான் ஸ்ரீமத் பின்பற்றுவதின் நோக்கம், என்னில் முற்றிலும் தூய்மை மற்றும் உயர்ந்த நிலை வரவழைத்துக்கொள்வதேயாகும்.** இதை உணர்ந்த நிலையில், உள்ளத்தால் ஸ்ரீமத்தை நான் விரும்புகிறேனா? வரவேற்று ஏற்று கொள்கிறேனா? நம்முடைய நோக்கத்தோடு நாம் இணைந்து செல்லவேண்டும். இவ்வாறு செயல்படும் போது பாபா சிறிது சிறிதாக நம் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்வார். அவருடையதாக ஆக்கிக்கொள்வார். **அவர் உள்ளத்திலும் நமக்கு இடம் கொடுப்பார். பாபாவினுடைய உள்ளமானது விசாலமானதாகும். அதற்கு நம்மால் சிறிதும் அப்பழுக்கு ஏற்படக்கூடாது. நாம் தயாராக வேண்டும். நம் உள்ளத்திலும் வேறு யாருக்கும்,எதற்கும் இடம் இல்லை.**

நம்மை நாம் மிக கவனமாக எடுத்துச்செல்லவேண்டும். **தூய்மையானது நம்முடைய சுய மரியாதையாகும்.** ஸ்ரீமத் எனக்கு வழிகாட்டுகிறது. என்னுடைய சுயமரியாதை நான் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால், ஸ்ரீமத் கூறும் ஒவ்வொரு வார்த்தைக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும். மற்ற 'மத்துகள்' நமக்கு துக்கத்தையே கொடுக்கும். ஸ்ரீமத் என் வாழ்கைக்கு தண்டவாளம் வகுக்கிறது. நான் நிர்வாணமான உடலிலிருந்து விலகிய ஆத்மா, நான் கடவுளுக்கு உரியவன், அவர் ஸ்ரீமத்தை பின்பற்றுகிறேன். பாபா சொல் கிறார், நீங்கள் எல்லா சக்திகளுக்கும் அதாரிட்டியானவர், உலக கல்யாணத்துக்கு காரணமாக இருப்பவர், தேவதா ஆத்மக்கள், தூய இரத்திணங்கள் என பல சுவமானங்கள் கூறி நம்மை உயர்த்துகிறார். இவ் உணர்வுகள் நன்கு நம்மில் <u>ஊறி</u> விடவேண்டும்.இவை தவிற மற்றவை நம்மை தண்டவாளத்திலிருந்து கவிழச்செய்யும்.

ஸ்ரீமத் நம்முடைய பண்புகள், உள் மன சக்திகள் உயர்த்துகிறது. பொறுமை சக்தி, இரக்க உணர்வு, தூய அன்பு, உறுதி ஆகியவைகளை நம்முடைய நன்மைக்காகவும், உலகத்தாரின் நன்மைக்காகவும் செயல்படுத்த, பகவான் நமக்கு கொடுக்கிறார். எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலைகள் நிகழலாம், அவை உங்களை தடுமாறச்செய்யும், ஆனால் அவை நிகழுமுன் உங்களுடைய மேலான நிலையை அடைந்து, அதனை எதிர்கொள்ளுங்கள். **நான் யார்? யாருக்கு உரியவன்?** உணர்ந்த நிலையில் பாபாவை நினவுக்கு கொண்டு வாருங்கள். அதனை உபயோகியுங்கள் உங்கள் உயர் நிலையடைய. மீண்டும் சரியான நிலைக்கு எல்லாம் திரும்புவதை உணர்வீர்கள். நல் விருப்பங்களுடன் உங்கள் சுயமரியாதையில் நிலைத்து பாபாவின் நினைவில் செயல்பட்டால் தடங்கல் கொடுத்தவரே வந்து வருத்தம் தெரிவிப்பார்கள்.

முழுமையான **நம்பிக்கையும் மிக மிக அவசியமாகிறது**. ஞானம் முழுமையாக ஆறிவதால் நம்பிக்கை வளர்கிறது. பிரச்சினைகள் வரலாம், நிந்தனைக்கு உள்ளாகலாம். வெற்றி, தோல்வி, புகழ்ச்சி,இகழ்ச்சி இடையே வரலாம். இந்த நாடகமானது 5000 வருடங்களுக்கு ஓடுகிறது. என்ன நடக்கிறதோ, அது ஒரு நொடிக்கும் மிக குறைந்த நேரமேயாகும் . ஆன்மாக்கள் காட்சிகளை காண்பவர்களே. பாபா சொல்கிறார், நம் பாத்திரமானது இந்த நாடகத்தில் ஒரு மிகச்சிறு காட்சியே யாகும். நம்முடைய மன நிலையானது சம நிலையில் அமைத்துக்கொண்டு அமைதியாக இருக்கவேண்டும் . மற்றவருக்கு உதாரணமாக ஆகவேண்டும். நாம் மிக மேலான ஆசனத்தில், தந்தையின் உள்ளத்தில் அமர்ந்திருப்பவராகும். இது எப்பொழுதும் நினைவிலிருக்க வேண்டும்.

ஆனால், மேலான நிலையில் நிலைத்திருக்க சில விஷயங்கள் பாபா, நினைவு கொள்ள சொல்கிறார். நம் நிலை தடுமாற **மாயை மனதில் 'ஆனால்' எனும்** வார்த்தையுடன் ஆரம்பமாகிறது. உங்கள் குறிக்கோளை அடைவதில் சந்தேகத்தை

தோற்றுவிக்கும். உங்கள் உள்மன நிலையில் வீணான எண்ணங்கள் வரிசையாக தோன்றும். மீள வழி, உங்கள் வீணான சிந்தனைகளை உடனே நிறுத்தவும். உங்கள் சுயமரியாதையை நினைவு கொள்ளவும். **நான் யார்? யாருடையவன்? நினைவுகொள்ளுங்கள்.** முரளி தவறாமல் கேட்பது அவ்வப்பொழுது நினைவு கொள்வது முக்கியமானதாகும். முரளியை தினமும் விரும்பிப் படிப்பதும், கேட்பதும் மிக அத்தியாவசியமானதாகும். மரியாதைகள் கடைப்பிடிப்பது, அதன் எல்லைக்குள் இருப்பது நம் இலட்சிய ரேகையாகும். எப்பொழுதும் ஸ்ரீமத்தின் மீதான தூய விருப்பத்தை விழித்திருக்க செய்யவும். ஓம் சாந்தி.
(based on the speeches of Brother Charlie, Australia, in Maduban)